பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 25 செவ்வாய்க்கிழமை 11.11.2025 | அதிர்வு 105

## கொட்டாஞ்சேனை சூடு: மேலும் ஐவர் சிக்கினர்!

### இருவர் பெண்கள் எனத் தெரிவிப்பு

கொழும்பு – கொட்டாஞ்சேனை, 16ஆம் ஒழுங்கையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து மாவீரர் நாள் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கு நடவடிக்கை

## யாழ். மாநகர மேயர் அறிவிப்பு

## ‘சைக்கிள்’ அணி கடும் எதிர்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

நல்லூரில் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து மாவீரர் நாள் நினைவேந்தலை அனுஷ்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாநகர மேயர் திருமதி. மதிவதனி விவேகானந்தராஜா தெரிவித்தார்.

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக உள்ள யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் கடந்த சில வருடங்களாக மாவீரர் நாள் நினைவேந்தல் நடைபெற்று வருகின்றது.

ஆனால், இந்த முறை அந்தப் பகுதியை இரண்டு தரப்புக்கள் கோருவதால் அதை யாருக்கு வழங்குவது என்பதில் முடிவு எட்டப்படாத நிலை காணப்பட்டது. 04

# வடக்கில் அரச தாதியர் நாளை காலை முதல் 24 மணிநேர பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் நாளை புதன்கிழமை காலை முதல் 24 மணிநேர அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்த அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் தீர்மானித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான வருகை மற்றும் புறப்பட்டல் பதிவுக்காக ஏனைய ஊழியர்களுடன் சேர்த்து ஒரே கையொப்பப் பதிவு புத்தகம் பயன்படுத்தல் என்ற வடக்கு மாகாண சுகாதார சேவைகள் 03




# யாழ். மாநகர சுகாதார சிற்றூழியர்கள் இன்று பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம்

## வீதியில் நிற்பவர்களைச் சந்திப்பதற்குத் தயாரில்லை என்று மேயர் தெரிவிப்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

முறையான முன்னறிவிப்போ அன்றி தெரியப்படுத்தலோ இன்றி வீதியில் நிற்பவர்களைச் சந்திப்பதற்கு நான் தயாரில்லை என்று தெரிவித்த யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் மதிவதனி விவேகானந்தராஜா, சதிகள், பின்னணிகள் மூலம் போராட்டத்தில் இறங்கியுள்ள இவர்கள், வேண்டுமானால் தன்னை எழுத்து மூலமான ஆவணத்துடன் நேரடியாக வந்து சந்தித்தால் அது தொடர்பில் பரீசலிக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

பொறியியலாளரது கட்டுப்பாட்டில் இருந்து தம்மை விடுவித்து பிராந்திய சுகாதார சேவை அதிகாரியின் கீழ் செயற்பட அனுமதிக்குமாறு கோரி யாழ். மாநகர சுகாதார சிற்றூழியர்கள் இன்று பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு இன்று நடைபெற்ற நிலையில் இது தொடர்பில் மேயரிடம் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிய நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அனைத்து மாநகர, நகர சபைகளினது சுகாதாரப் பகுதிகள் பிராந்திய சுகாதார அதிகாரியின் கீழ்தான் இருந்து வருகின்றது.

ஆனால், யாழ். மாநகரின் சுகாதாரப் பிரிவு மட்டும் பொறியியலாளரது கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

அதனால் நாளாந்தம் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் உருவாகி வருகின்றன.

எனவே, இவ்வாறு இருக்கும் நடைமுறையை மாற்றி பிராந்திய சுகதார அதிகாரியின் கீழ் கொண்டுவரல் வேண்டும்.

அத்துடன் ஊழியர்களது நிரந்தர நியமனம், இடமாற்றம், உழவு இயந்திர ஒப்பந்தங்கள் மூலம் வகை தெரியப்படும் திண்மக்கழிவுகள் பிரித்தாழ் கையில் இருக்கும் குழப்பங்கள் உள்ளிட்ட சில நடைமுறை பிரச்சினைகளுக்குத் தீர்வு, கண்காணிப்பாளர்களது இடமாற்றம் உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி ஊழியர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இவர்களது பிரச்சினைக்குத் தீர்வை வழங்க யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.








# யாழில் போதை மாத்திரைகளுடன் இன்றும் ஒருவர் வசமாகச் சிக்கினார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியில் போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாவாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆயிரம் போதை மாத்திரைகளும் இரண்டு கிலோ 420 மில்லிகிராம் கஞ்சா கலந்த மாவாவும் இதன்போது கைப்பற்றப்பட்டன.

இருபது வயது மதிக்கத்தக்க மேற்படி சந்தேகநபர், கொழும்பு – கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக உடுவிலில் கைது செய்யப்பட்டவரின் உறவினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


சந்தேகநபரை மானிப்பாய் பொலிஸார் ஊடாக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கதாப்பிரசங்கத்தில் காரைதீவு அம்சிகா தேசிய சாதனை

(வி.ரி . சகாதேவராஜா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய இவ்வருடத்துக்கான அறநெறி மாணவர்களுக்கான தேசிய மட்ட கதாப்பிரசங்கம் நிகழ்த்தும் போட்டியில் அம்பாறை மாவட்டம், காரைதீவைச் சேர்ந்த செல்வி. உதயகுமார் அம்சிகா தரம் – 2 பிரிவில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் காரைதீவு இந்து சமய விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை மாணவி யாவார்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**வடக்கில் அரச...**

பணிப்பாளரின் முடிவுக்கு எதிராக இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

வேலைநிறுத்தம் நாளை புதன் கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பித்து, நாளைமறுதினம் வியாழக் கிழமை காலை 7 மணிக்கு முடிவடையவுள்ளது.

இது தொடர்பில் அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில்,

“வடக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாண சபைகளிலோ அல்லது மத்திய அரசின் வைத்தியசாலைகளிலோ / சுகாதார நிறுவனங்களிலோ இத்தகைய நடைமுறை அமுலில் இல்லாததால், வடக்கு மாகாணத்தில் மாத்திரம் இது தன்னிச்சையாக அமுல்படுத்தப்படுவது பாரதூரமான பிரச்சினை யாகும்.

தாதியர்கள் 24 மணி நேரமும் சேவையில் ஈடுபடுகின்றனர். சாதாரண கடமை நேரங்கள், மேலதிக கடமை நேரங்கள், வாராந்த ஓய்வு நாட்களில் கடமைகள், அரச பொது விடுமுறை நாட்களில் கடமைகள் போன்ற ஒன்றுக்கொன்று வேறுபட்ட கொடுப்பனவுகளுக்கு அடிப்படையாக அமையும் கடமைகளை அவர்கள் செய்கின்றனர்.

தற்போதுள்ள சேவைத் தேவைகள் காரணமாக கிட்டத்தட்ட ஒவ்வொரு தாதியரும் இந்தக் கடமைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. அத்தகைய சிக்கலான சூழ்நிலைகளில், கொடுப்பனவுகளுக்கான தெளிவான உறுதிப்படுத்தலுக்காக, சாதாரண கடமைகளுக்கு மேலதிகமாகச் செய்யப்படும் கொடுப்பனவுகளுக்கு அடிப்படையாக அமையும் ஏனைய ஒவ்வொரு கடமை நேரங்களுக்கும் தனித்தனி வருகைப் பதிவேடுகளைப் பேணுவதற்கு சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிலைமை இவ்வாறிருக்க, அனைத்து ஊழியர்களும் ஒரே வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடுவதால், பல்வேறு கடமை நிலைகளை இலகுவாக அடையாளம் காண்பது ஒரு பாரிய பிரச்சினை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம். இதனால், சேவைத் தேவையின் பேரில் செய்யப்படும் மேலதிக கடமைகளுக்கான உரிய கொடுப்பனவுகளைக்கூட இழக்கும் அபாயம் உருவாகலாம் என்பதும் தெளிவாகின்றது.

அரசின் வேலைத்திட்டமாக, எதிர்காலத்தில் உயிரியல் அளவீட்டு முறைகள் அமுல்படுத்தப்படும்போது, அதற்கேற்ப தற்போதுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொள்ளலாம் என்று தெரிவிப்பதோடு, அதுவரை இடைக்கால நடவடிக்கையாக, வெறுமனே கணக்காய்வு அதிகாரிகளுக்கு வசதியாக அமையும், ஆனால் ஏனைய அதிகாரிகளுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் இந்த யோசனையை அமுல்படுத்துவதை நிறுத்திவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்.” – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தமிழ்க் கட்சிகள்...**

இதையடுத்து யாழ். மாநகர சபையின் கடந்த மாதாந்த அமர்வு நடைபெற்றபோது மேயரின் அறிவிப்பில், மாவீரர் நாள் நினைவேந்தலைச் செய்வதற்கு நல்லூரில் ஒரே இடத்தை இரண்டு தரப்புக்கள் கோரும் நிலையில் அந்த இடத்தை மாவீரர் வார காலத்தில் வாடகைக்கு விடுவதில்லை என்றும், எதிர்வரும் காலங்களில் நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் மற்றும் மாவீரர் நாள் நினைவேந்தலை யாழ். மாநகர சபை பொறுப்பெடுத்துச் செய்ய வேண்டும் என்றும் யோசனையை முன்வைத்தார்.

இந்த யோசனை தொடர்பில் உறுப்பினர்களிடையே வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டதையடுத்து அது தொடர்பில் முடிவுகள் எட்டப்படவில்லை. அதில் இணக்கத்தை ஏற்படுத்த கால அவகாசம் வழங்கப்பட்ட போதும் இணக்கமான நிலை ஏற்படவில்லை.

யாழ். மாநகர சபையில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சிகள் மேயரின் யோசனையை வரவேற்ற போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடுமையாக எதிர்த்தது.

இந்நிலையில், இன்று நடைபெற்ற யாழ் மாநகர சபை அமர்விலும் இந்த விடயம் தொடர்பில் கடும் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ். மாநகர சபை மேயர், “சைக்கிளோ, மானோ தனியாக ஒரு கட்சி நினைவேந்தல் செய்ய இடமளிக்க முடியாது. தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செய்ய வேண்டும்.” – என்றார்.

மேயரின் முடிவுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால், ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் மேயரின் முடிவை வரவேற்றனர்.





**கொட்டாஞ்சேனை...**

மேலும் 5 சந்தேகநபர்கள் கொழும்பு மாவட்ட பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

18 முதல் 33 வயதுக்குட்பட்ட கிராண்ட்பாஸ், வெல்லம்பிட்டிய மற்றும் கொழும்பு 13 பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் இரண்டு பெண்களும் அடங்குகின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொழும்பு மாவட்ட பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.





# பிரஜா சக்தி தவிசாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கிவைப்பு

**(வி.ரி. சகாதேவராஜா)**

கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஏற்பாட்டில் 'பிரஜாசக்தி' வறுமை ஒழிப்புக்கான தேசிய இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் வேலைத் திட்டத்துக்கான பிரதிநிதி குழுக்களின் தவிசாளர்ளுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

கல்முனை வடக்கு பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் பிரதி அமைச்சருமான வசந்த பியதிஸ்ஸவினால் தலைவர்களுக்கான நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன

கல்முனை வடக்கு பிரதேச பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான 'பிரஜாசக்தி' வறுமை ஒழிப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள இந்தத் தவிசாளர்கள் இணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல் நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைப் பணிகளுக்காகத் தொண்டர் அடிப்படையில் கடமையாற்றுவார்கள்.

















# நெடுந்தீவு படகு சேவை: நேர ஒழுங்கில் மாற்றம்



**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை தன்மையால் குறிகாட்டுவான் – நெடுந்தீவுக்கிடையில் சேவையில் ஈடுபடும் படகுகளின் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று நெடுந்தீவு பிரதேச செயலர் என்.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

நெடுந்தீவு – குறிகாட்டுவான் இடையில் சேவையில் ஈடுபடும் வடதாரகை மற்றும் நெடுந்தாரகை ஆகிய இரு படகுகளின் சேவை நேரம் நாளைமறுதினம் வியாழக்கிழமை முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“தற்போது நிலவும் காலநிலையில் விரைவாக இருட்டுவதனால், படகு சேவைகளை 30 நிமிடங்கள் முன்னதாக மாற்றியுள்ளோம். அதன் அடிப்படையில் நெடுந்தீவில் இருந்து மாலை 3.30 மணிக்குப் புறப்படும் படகு, வியாழக்கிழமை முதல் 30 நிமிடங்கள் முன்னதாக 3 மணிக்கு புறப்படும். அதேபோன்றுகுறிகாட்டுவானில்இருந்து, மாலை 5 மணிக்கு புறப்பட்ட படகு இனி மாலை 4.30 மணிக்கு புறப்படும்.

அதேவேளை, ஞாயிற்றுக்கிழமைகளில் நெடுந்தீவுக்குப் பெருமளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து, காலையில் நீண்ட நேரம் குறிகாட்டுவானில் படகுக்குக் காத்திருப்பதனால் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6.45 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்படும் படகு , குறிகாட்டுவான் சென்று மீண்டும் காலை 8 மணிக்குக் குறிகாட்டுவானில் இருந்து தனது சேவையை ஆரம்பிக்கும்.” – என்றார்.

இதேவேளை, குமுதினி படகின் நேர ஒழுங்கில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.




# அக்கரப்பத்தனை உருவளி தோட்டத்தில் ஆலயத்திற்குள் சிக்கிய சிறுத்தைப் புலி

**(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)**

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரப்பத்தனை உருவளி தோட்டத்தில் உள்ள ஆலயம் ஒன்றில் சிறுத்தை புலி ஒன்று உயிருடன் சிக்கியுள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் இன்று செவ்வாய்கிழமை இடம் பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இன்று விடியற்காலை ஆலயத்தை திறந்து ஆலயத்தில் உள்ள பணிகளை முன்னெடுப்பதற்கு ஆலயத்திற்கு வந்த குருக்களினால் சிறுத்தை இனங்காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொதுமக்கள் அக்கரப்பத்தனை பொலிஸாருக்கு தகவல் வழங்கியமையை அடுத்து பொலிஸார் ஊடாக நுவரெலியா வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் வனவிலங்கு அதிகாரிகள் வந்து சிறுத்தை புலியை மீட்டு வனப்பகுதியில் விடுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர். இது குறித்து மக்கள் எதுவும் அச்சமடைய தேவையில்லை எனவும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஐக்கியம் எப்போது?

தற்போதைய அரசாங்கத்துக்கும் ஆட்சிப் பீடத்திற்கும் எதிராக மக்கள் கருத்துக்களை ஒன்று திரட்டும் விதத்தில் வரும் 21ஆம் திகதி நுகேகொடையில் கூட்டு எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை பெரும் எடுப்பில் நடத்துவதற்கு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனாலும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்த்தரப்பில் முக்கியமான கட்சிகள் இதில் பங்குபற்ற மாட்டா என்று அறிவித்துள்ள பின்னணியில், இந்த எதிர்ப்புப் போராட்டம் வெற்றி பெறுமா என்ற கேள்வி பல தரப்புகளிலும் எழுப்பப்படுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளம் தலைவரான நாமல் ராஜபக்ஷவை எதிரணித் தரப்பில் முன்னிலைப்படுத்துவதற்காகவே இந்த நகர்வு என்று கருதும் எதிர்த்தரப்பின் பல தலைவர்கள், அந்த ஒற்றைக் கருத்தில் ஒன்றுபட முடியாது என்ற பின்புலத்தில் அந்த முயற்சியில் இருந்து தங்களை விலக்கிக் கொண்டுள்ளார்கள் என்றும் கூறப்படுகின்றது.

தற்போதைய அரசினால் தான் கைது செய்யப்பட்டமையை அடுத்து கிளர்ந்தெழுந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் நடப்பது ஒரு கட்சி ஆட்சி முறையை நிலை நிறுத்துவதற்கான 'அரசமைப்பு சர்வாதிகாரம்' என்று அறிவித்து, அதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் நாடு முழுவதிலும் ஆயிரம் கூட்டங்கள், சத்தியாக்கிரகப் போராட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தும் என்று அறிவித்தார்.

ஆனால் அத்தகைய நடவடிக்கை எதனையும் அவரது கட்சி இதுவரை ஆரம்பித்த மாதிரித் தெரியவில்லை. இப்போது நுகேகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் அவரது கட்சி கலந்துகொள்ளுமாயினும் அவர் அதில் பங்குபற்ற மாட்டார் என்றும் கூறப்படுகிறது.

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் கூட்டுச் செயற்பாடு தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்து கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தனிப்பட்ட நலன்களுக்காக அல்லாமல், கொள்கை உடன்பாட்டின் கீழ் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டு எதிர்க்கட்சியுடன் சரியான நேரத்தில் ஒன்றிணையும் என்றார்.

பட்ஜெட் விவாதத்தில் பேசிய அவர், வாகனங்கள், வசதி வாய்ப்புகள், சிறப்பு நலன்கள், அமைச்சர் பதவிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் காப்பீடு அல்லது பிற பதவிகளுக்காக நாங்கள் ஒன்றிணையப் போவதில்லை. மாறாக மக்களுக்கு ஒரு வளமான நாட்டைக் கொண்டுவருவதற்கான கொள்கை உடன்பாட்டின் கீழ் ஒன்றிணைவோம் - என்றார்.

கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டுச் செயற்பாடு குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கிண்டலாக சில குறிப்புகளைக் குறிப்பிட்டிருந்தார். ஆயினும், ஜனாதிபதியின் ஆலோசனை எங்களுக்குத் தேவையில்லை, ஆயினும் உரிய சமயத்தில் தாங்கள் ஒன்றிணைவார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால், அப்படி இந்த எதிர்க் கட்சிகள் ஒன்றிணைவது எப்போது, அது சாத்தியமாகுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வியாகும்.

# உயர்தரப் பரீட்சைகள் நிறைவடைவதற்கு முன் மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை

இந்த ஆண்டு கா.பொ.த உயர்தரப் பரீட்சைகள் நிறைவடைவதற்கு முன்னரே மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடங்கும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி தெரிவித்துள்ளார்.




2,362 பரீட்சை மத்திய நிலையங்களில் நேற்று தொடங்கிய உயர்தரப் பரீட்சையின் இரண்டாம் நாள் இன்று ஆகும்.

கா.பொ.த உயர்தரப் பரீட்சை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்த நிலையில் இந்த ஆண்டு, 246,521 பாடசாலை பரீட்சார்த்திகளும், 94,004 தனியார் பரீட்சார்த்திகளும் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரமித் ரம்புக்வெல்லவுக்கு எதிராக இன்று குற்றப்பத்திரிகை தாக்கல்

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் மகன் ரமித் ரம்புக்வெல்லவுக்கு எதிராக லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு, கொழும்பு மேல்நீதிமன்றில் இன்று செவ்வாய்க்கிழமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

சட்டவிரோதமாக சொத்துக்களை குவித்ததாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் ரமித் ரம்புக்வெல்லவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதவான் மொஹமட் மிஹால் முன்னிலையில் இன்று அழைக்கப்பட்டது.



இதன்போது நீதிமன்றில் ஆஜரான இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள், ரமித் ரம்புக்வெல்லவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

இதனை பரிசீலித்த கொழும்பு மேல்நீதிமன்ற நீதவான், ரமித் ரம்புக்வெல்லவை குறித்த வழக்கிலிருந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கு பிணை மற்றும் 10 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

# மேல் மாகாணத்தில் வாகன திருட்டு; பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

மேல்மாகாணத்தில் வாகன திருட்டு அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப். யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனை தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவிக்கையில்,

"விசேடமாக கொழும்பு நகரத்தில் வீதியில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் திருடப்படுகிறது.

நவம்பர் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் மாத்திரம் மேல்மாகாணத்தில் 10 மோட்டார் சைக்கிள்களும் 3 முச்சக்கரவண்டிகளும் திருடப்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளது.வாகன திருட்டு தொடர்பில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



பல்வேறு குற்றச் செயல்களுக்கு பயன்படுத்துவதற்காகவும் வாகனங்கள் திருடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன." என்றார்.

GUNAAM'S SUPERMARKET
குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# நாடாளுமன்றத்தில் முறையற்ற மொழிப் பிரயோகம் விசாரணை நடத்தப்படுமென சபாநாயகர் அறிவிப்பு

நேற்றைய நாடாளுமன்ற அமர்வுகளின் போது சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் முறையற்ற வார்த்தைகளை பயன்படுத்தியமை தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அலுவலகத்தால் இது குறித்து விசாரணை நடத்தப்படும் என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன இன்று அறிவித்தார்.

நேற்றைய அமர்வின் போது முறையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்னிப்பு கோர வேண்டும் என்று நிலையியற் கட்டளை 82.1 இன் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அர்ச்சுனா எழுப்பிய கேள்விக்கு சபாநாயகர் இவ்வாறு பதிலளித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்ட அத்தகைய வார்த்தைகள் ஹன்சார்ட்டில் இருந்து நீக்கப்பட்டுள் ளன என்றும், நேற்றைய அமர்வுகளின் போது முறையற்ற மொழி பயன்படுத்தப்பட்டது குறித்து விசாரிக்க நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அலுவலகத்திற்கு தான் உத்தரவிட்டதாகவும் சபாநாயகர் கூறினார்.

---





# நாவிதன்வெளி பிரதேச சபையில் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி மறுமலர்ச்சிக்காக வாசிப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற போட்டி நிகழ்வுகளில் திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று நாவிதன் வெளியில் இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் பிரதேச சபை தவிசாளர் இ. ரூபசாந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ. கமல் நெத்மியம், விசேட அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரக்குமாரும் கௌரவ அதிதிகளாக உப தவிசாளர் எம். புவன ரூபனும் உறுப்பினர்களான டி.சித்திரக் குமார், எம்.ஏ.நஸீர், எம்.பி.யூஜின், எம்.பி.நவாஸ், ஜனாபா.ஏ.எல்.சௌதியா ஆகியோரும் கலந்துகொண்டனர்..

சிறப்பு அதிதிகளாக பிரதேச சபை செயலாளர் பி.சதீஸ்கரன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, கவிதை, சித்திரம், பேச்சு ,கட்டுரை ஆகிய போட்டிகளில் முதலாம் இரண்டாம், மூன்றாம் நிலைகளைப் பெற்ற மாணவர்கள் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.








# மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான இணைந்து ஒளிரும் மலர்கள் நிகழ்வு

(த.சுபேசன்)

ஜெசாக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளிக் குழந்தைகளினுடைய திறமைகளை வெளிப்படுத்தும் 'இணைந்து ஒளிரும் மலர்கள் நிகழ்வு' கொடிகாமத்தில் இடம்பெற்றது.

கொடிகாமத்தில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் இன்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங் களைச் சேர்ந்த விசேட தேவைப் பாடுடைய குழந்தைகள் பங்குபற்றிய இந்நிகழ்வில், பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளு நர் கலந்து சிறப்பித்திருந்தார்.







# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் வரவு - செலவு திட்டம் நிறைவேற்றம்

(பூ.லின்ரன்)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் 13 உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சபை அமர்வு சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் இன்று காலை சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவீரர்களுக்கும், யுத்தத்தில் கொல் லப்பட்ட மக்களுக்காகவும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு சபை அமர்வு ஆரம்பமானது.

இதனையடுத்து, 2026 ஆம் ஆண் டிற்க்கான வரவு செலவு திட்டம் வாக் கெடுப்பிற்கு விடப்பட்டது. இதன்போது சபையின் 13 உறுப்பினர்களும் ஆதர வாக வாக்களித்தனர்.










# ஆனையிறவில் விபத்து; டிப்பர் வாகனம் சேதம்

(பூ.லின்ரன்)

கிளிநொச்சி மாவட்டம் ஆனையிறவு பகுதியில் இன்று காலை விபத்து ஒன்று இடம் பெற்றுள்ளது.

மாடு ஒன்று வீதிக்கு குறுக்காக சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த பஸ் விபத்து ஏற்படுவதை தவிர்ப்பதற்காக வேகத்தை குறைத்து நிறுத்தியுள்ளது.

அப்போது பின்னால் வந்துகொண்டிருந்த படி ரக வாகனத்தின் சாரதி, பஸ்ஸை மோதி விபத்து ஏற்படுவதை தவிர்ப்பதற்காக தனது வாகனத்தை திடீரென நிறுத்தியுள்ளார்.

இதன் போது பின்னால் வந்துகொண்டிருந்த டிப்பர் வேக கட்டுப்பாட்டை இழந்து படி ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# மரகுற்றிகளை ஏற்றிச் சென்ற லொறி 25 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து

(எஸ். சதீஸ் )

பொகவந்தலாவ பலாங்கொட பிரதான வீதியின் பொகவந்தலாவ பெற்றோசா பகுதியில் மரக்குற்றில்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று, 25 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10.45மணியவில் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாரத்தென்ன பகுதியில் இருந்து கம்பளை பகுதிக்கு மரக்குற்றிகளை ஏற்றி சென்றபோது பொகவந்தலாவ பலாங்கொட பிரதான வீதியின் பெற்றோசோ பகுதியில் வளைவில் லொறியின் பின் சில் கீழ் இறங்கியதன் காரணமாக விபத்து இடம் பெற்றதாக பொகவந்தலாவ பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவம் இடம்பெற்ற போது லொறியின் சாரதி மாத்திரம் இருந்துள்ளார் எனவும் சாரதிக்கு எவ்வித காயங்களும் ஏற்பட வில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற விசேட சுற்றிவளைப்பு: பலர் கைது

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று திங்கள் கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 31,594 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 693 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 31 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 288 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 178 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 22 பேரும், கவனக் குறைவாக வாகனம் செலுத்திய 16 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,320 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டில்லி கார் வெடிப்புச் சம்பவத்தில் பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு



டில்லி செங்கோட்டை அருகே சிக்னலில் நின்ற கார் வெடித்துச் சிதறிய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

இதன்போது 40 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இது தீவிரவாத தாக்குதலாக இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்ததை அடுத்து, மும்பை, சென்னை உட்பட இந்தியா முழுவதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

டில்லி செங்கோட்டை பகுதியில் நேற்று மாலை 6.30 மணி அளவில் வாகனங்கள் வழக்கம்போல சென்றுகொண்டு இருந்தன. அப்போது, சிக்னலில் நின்ற கார் ஒன்று பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. இதில், அருகே நின்றிருந்த சிலகார்களிலும் தீப்பிடித்தன. இதில் 13 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 40 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இதுகுறித்து டில்லி பொலிஸ் ஆணையர் சதீஷ் கோல்சா தெரிவிக்கையில்,

“மாலை 6.52 மணி அளவில் செங்கோட்டை பகுதியின் கவுரி சங்கர், ஜெயின் கோயில்களுக்கு அருகே மெதுவாக சென்ற கார் ஒன்று சிக்னலில் நின்றுள்ளது. அப்போது அந்த கார் வெடித்துச் சிதறியுள்ளது. இதில் அருகே இருந்த கார்கள் 150 மீற்றர் தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டன. டில்லி பொலிஸ், என்.ஐ.ஏ, என்.எஸ்.ஜி. அமைப்புகள் ஒன்றிணைந்து விசாரணை நடத்தி வருகின்றன.” என்று தெரிவித்தார்.

# “அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்”: கார் வெடிப்புக் குறித்து ஸ்டாலின் இரங்கல்



டில்லி செங்கோட்டை அருகே ஏற்பட்ட கார் வெடிப்பு சம்பவத்துக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர்,

“டில்லி செங்கோட்டை அருகே நடந்த வெடிப்பு சம்பவத்தில் பல அப்பாவிகள் பலியானதை அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட காட்சிகள் உண்மையிலேயே மனதை உடைக்கின்றன. துயரத்தில் ஆழ்ந்துள்ள குடும்பத்தினருக்கு எனது இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயங்களுடன் போராடுபவர்கள் வலிமை பெறவும், விரைவில் குணமடையவும் விழைகிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துக்கு குடியரசுத் தலைவர் முர்மு, பிரதமர் மோடி, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்தியாமுழுவதும் பல்வேறு மாநிலங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கம், பிஹார், மத்தியப் பிரதேசம்,ஹரியானா, உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் உஷார் நிலை பலப்படுத்தப்பட்டுள்ளது.

மும்பை, ஹைதராபாத், சென்னை, பெங்களூர்உள்ளிட்ட நகரங்களில்பொலிஸார் தீவிர வாகன சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதே போல தமிழகத்தின் சென்னை, கோவை, திருச்சி உள்ளிட்ட நகரங்களில் ரயில் நிலையங்களிலும் பொலிஸார் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.



# பிஹாரில் இன்று இறுதிக்கட்டத் தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்ற வாக்குப்பதிவு

பிஹாரின் 243 தொகுதிகளில் முதல்கட்டமாக 121 தொகுதிகளுக்கு கடந்த 6 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற்றது. மீதம் உள்ள 122 தொகுதிகளுக்கான 2 ஆவது இறுதிக் கட்ட வாக்குப்பதிவு இன்று நடை பெறுகிறது.

தேர்தல் ஆணையத் தரவுகளின் படி, இரண்டாம் கட்டத்தில் மொத்தம் 3.7 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இதில் 1,74,68,572 பேர் பெண்கள் ஆவர். ஒவ்வொரு தொகுதி யிலும் சராசரியாக 2 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர்.



136 பெண்கள் உட்பட 1,302 வேட்பா ளர்கள் போட்டியிடுகின்றனர்.

இறுதிக்கட்ட வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்கி விறு விறுப்பாக நடைபெற்றது. காலை 9 மணி நிலவரப்படி 14.55 வீத வாக்குகள் பதிவாகியிருந்தன. அதிகபட்சமாக பிஹாரின் புர்னியா மாவட்டத்தில் 15.54 வீத வாக்குகள் பதிவாகி யிருந்தன.

# மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் 14 பேர் கைது; மத்திய அமைச்சருக்கு தமிழ்நாடு முதல்வர் கடிதம்



தமிழ்நாடு, மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் 14 பேரை எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினர் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் அருகே வானகிரி மீனவக் கிராமத்தைத் சேர்ந்த ராமையன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் கடந்த 3 ஆம் திகதி 14 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு படகு பழுதடைந்து கடலில் தத்தளித்த நிலையில், அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 14 மீனவர்களையும், படகுடன் கைது செய்து, மயிலடி மீன்பிடி துறைமுகத் துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். பின்னர் கைது செய்யப்பட்ட 14 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் தடுத்துவைத்துள்ள னர்.

இந்த விடயம் தொடர்பில் இந் திய வெளியுறவுத்துறை அமைச் சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடித்த எழுதி யுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் குறிப்பிடு கையில்,

“நவம்பர் 9 ஆம் திகதி இரவு, மயி லாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்களை அவர்களது படகுடன் இலங்கை கடற்படையினர் சிறை பிடித் துள்ளமையை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

அந்த வகையில் இதுவரை 128 தமி ழக மீனவர்கள் சிறையில் உள்ளனர். 248 மீன்பிடிப் படகுகளும் இலங்கை காவலில் உள்ளன. நீண்டகாலமாக உள்ள இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டு, சிறை பிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் விடு விக்கவும், படகுகளை மீட்கவும் தேவை யான அனைத்து தூதரக நடவடிக்கை களையும் மேற்கொள்ளவேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ரோஹிங்கியா அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது

## 11 உடலங்கள் மீட்பு





தாய்லாந்து – மலேசியா எல்லைக்கு அருகே மியான்மரைச் சேர்ந்த ரோஹிங்கியா அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்துக்குள்ளானவர்களை மீட்க மலேசியாவும் தாய்லாந்தும் கூட்டு தேடுதல் நடவடிக்கையை தொடங்கியுள்ளன.

விபத்தில் இதுவரை, 11 உடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் விபத்து நடந்த நேரத்தில் படகில் கிட்டத்தட்ட 70 பேர் இருந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

படகிலிருந்த 13 பயணிகள் உயிர் பிழைத்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், கிட்டத்தட்ட 230 அகதிகளை ஏற்றிச் சென்ற மற்றொரு படகு குறித்தும் எந்த தகவலும் இதுவரை வெளியாகவில்லை என்று மலேசிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# ரஷியாவில் விபத்துக்குள்ளான ஹெலிக்கொப்டர்; 5 பேர் பலி



ரஷ்யாவில் ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி விபத்தில் சிக்கி ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் டெகஸ்டான் நகரில் இராணுவத்திற்கு தேவையான ஆயுதங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்று உள்ளது.

இந்த தொழிற்சாலையில் பணியாற்றும் மூத்த அதிகாரிகள் உள்பட ஐந்து பேர் விபத்துக்குள்ளான ஹெலிக்கொப்டரில் டெகஸ்டான் நகரில் உள்ள அஷி- சு என்ற கிராமத்திற்கு சென்றுள்ளனர்.

இந்தநிலையில், கடற்கரை அருகே உள்ள நிலப்பரப்பில் ஹெலிக்கொப்டர் தரையிறங்க முற்பட்டுள்ளது.

இதன்போது, கட்டுப்பாட்டை இழந்த ஹெலிக்கொப்டர் இரண்டு துண்டாகி கடல் அருகில் உள்ள நிலப்பரப்பில் விழுந்துள்ளது.

இதையடுத்து, ஹெலிக்கொப்டர் தீப்பற்றி எரிந்து வெடித்து சிதறி அதில் இருந்த ஐந்து பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அவுஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்டோர் சமூக வலைதளங்களைப் பயன்படுத்தத் தடை

அவுஸ்திரேலியாவில் 16 வயதுக் குட்பட்டோர் சமூக வலைத்தளங் களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் ‘பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக்டொக், எக்ஸ், யூடியூப், ஸ்னாப்சாட்’ போன்ற சமூக ஊடகங்களின் பயன்பாட்டால் குழந்தைகளின் மனம், உடல் நலம் பாதிக்கப் படுவதாக பிரதமர் அந் தோணி அல் பனீஸ் குறிப்பிட்டிருந்தார்.

ஒன்லைனில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய, அவற்றைத் தடை செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.



இதற்கு எதிர்க்கட்சியினரும் ஆதரவு தெரிவித்த நிலையில், ஒன்லைன் பாதுகாப்பு திருத்தச் சட்டம் 2024 என்ற பெயரில் சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டம், 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள், சமூக ஊடகங்களில் கணக்குகளை ஆரம்பிக்கவோ, பயன்படுத்தவோ தடை செய்கிறது.


இந்த நடைமுறை எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கங்கள் - 3

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 11/11/2025

## தெற்கு ஒன்டாரியோவில் பனிப்பொழிவு எச்சரிக்கை



C3 ▶





# கனேடிய இராணுவத்தின் உயர் விருது பெற்ற யாழ்ப்பாணத் தமிழர் வாகீசன் மதியாபரணம்

கனடாவின் உயரிய இராணுவ கௌரவங்களில் ஒன்றான "Order of Military Merit (M.M.M.)" விருதை ஈழத்தமிழரான வாகீசன் மதியாபரணம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான வாகீசன் மதியாபரணத்திற்கு, கனடாவின் ஆளுநர் ஜெனரல் வசிக்கும் சுனைநயர உயடட மாளிகையில் நடைபெற்ற சிறப்பு விழாவில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் போரின் காரணமாக இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து கனடாவில் தஞ்சம் அடைந்த வாகீசன் மதியாபரணம், அந்நாட்டின் இராணுவத்தில் 30 ஆண்டுகளாக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

C2 ▶

# அமெரிக்க வர்த்தகக் கொள்கை கனடாவுக்கு புதிய சவாலாகும்

## பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு



தற்போதைய அமெரிக்க நிர்வாகத்தின் கீழ் உள்ள வர்த்தகக் கொள்கை, கனடா கையாளப் பழகியவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்று பிரதமர் மார்க் கார்னி கூறியுள்ளார்.

நியூ பிரன்சுவிக்கில் செய்தியாளர்களிடம் பேசிய கார்னி, கனடாவின் வனவியல் பொருள்களை தடுக்க அமெரிக்கா முயற்சிப்பதாகக் கூறினார்,

"இதனால் கனடா உள்ளூர் மூலப் பொருள்களைக் கொள்வனவு செய்வது முக்கியம்.

அமெரிக்கா, விதிகளை அல்லது விதிகள் பற்றிய அவர்களின் விளக்கத்தை மாற்றியுள்ளது.

அதனால்தான் கனடா வேகமாகச் செல்ல வேண்டும்," என்று அவர் தெரிவித்துள்ளார்.

கனடா வனவியல் பொருள்கள் மீதான அமெரிக்கக் கட்டுப்பாட்டிற்குக் கனடா வெவ்வேறு வழிகளில் பதிலளிக்க முடியும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.




# இன்ஃப்ளுவன்ஸா காய்ச்சலால் முதல் மரணம் பதிவு; கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்துக்கு எச்சரிக்கை

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் இந்த ஆண்டின் காய்ச்சல் பரவும் காலப்பகுதியில் முதல் மரணம் பதிவாகியுள்ளது.

குறித்த மாகாணத்தில் உள்ள 60 வயதுகளில் உள்ள ஒருவர் இன்ஃப்ளுவன்ஸாவால் உயிரிழந்துள்ளார்.

முன்னாள் தலைமை மருத்துவ அதிகாரியான வைத்தியர் ஜேம்ஸ் டால்போட், தற்பொழுது காய்ச்சல் பரவும் காலநிலை முழு வீச்சில் தொடங்கியுள்ளதாகவும், கடந்த ஆண்டு ஒரு தசாப்தத்தில் இல்லாத அளவுக்கு மோசமாக இருந்த நிலையில், இந்த ஆண்டும் கடுமையான சவாலை ஏற்படுத்தலாம் என்றும் எச்சரித்துள்ளார்.

மேலும், இதுவரை 100 இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எட்டு நோயாளிகள் தீவிர சிகிச்சையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஒன்டாரியோவில் சீரற்ற வானிலையால் 200இற்கு மேற்பட்ட வாகன விபத்துகள்




டொரொன்டோ பெரும்பாக பகுதியில் கடந்த 24 மணி நேரத்திற்குள் 200 இற்கும் மேற்பட்ட வாகன விபத்துகள் நிகழ்ந்துள்ளன என ஒன்டாரியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பகுதியில் மொத்தம் சுமார் 220 விபத்துகள் பதிவாகியுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல நேரங்களில் பனி என நினைத்தாலும் அது சிறிது அளவில் மட்டுமே இருக்கும், ஆனால் இப்போது உண்மையில் கனமான பனி பெய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாலை நேரத்தில் பனிப் பொழிய நின்ற பின்னர் வெப்பநிலை திடீரென குறைந்ததால், தரையில் இருந்த பனி கடினமான பனிக்கட்டியாக மாறியது என குறிப்பிட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை டொரொன்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் 10 சென்றி மீற்றர் பனியும், ஹாமில்டனில் 17 சென்றி மீற்றர் பனியும் பதிவாகியுள்ளது என கனடிய சுற்றாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பனி மற்றும் பனிக்கட்டி சாரதிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது, அதுவே விபத்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தது என தெரிவித்துள்ளனர்.

டொரொன்டோ மற்றும் சுற்றுப்பகுதிகளுக்காக வெளியிடப்பட்ட சிறப்பு வானிலை எச்சரிக்கை தற்போது நீக்கப்பட்டுள்ளதாலும், சில இடங்களில் பனி பெய்யும் வாய்ப்பு உள்ளதாகவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

**கனேடிய...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இந்த நிலையில், அவரின் நீண்டகால அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பான பணி சாதனைகளை மதித்து இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

விருதைப் பெற்றபின் தனது உணர்வுகளை பகிர்ந்துகொண்ட வாகீசன் மதியாபரணம்,

“இந்த விருது ஒரு பதக்கம் மட்டுமல்ல, என் வாழ்நாள் கனவின் நிறைவேற்றம்.

அகதியாக வந்த ஒரு தமிழ் இளைஞன் கனடா என்ற தேசத்திற்கு பணியாற்றி, இன்று அதன் உயரிய மரியாதையைப் பெறுவது பெருமை.” என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.



# தெற்கு ஒன்டாரியோவில் பனிப்பொழிவு எச்சரிக்கை

கனடாவில், தெற்கு ஒன்டாரியோ மற்றும் கியூபெக் மாகாணத்தின் சில பகுதிகளில் இந்த ஆண்டின் முதல் பனிப்பொழிவு தொடங்கியுள்ளது.

இந்நிலையில், அந்த பகுதிகளுக்குக் கனடாவின் சுற்றாடல் திணைக்களம் பனிப்பொழிவு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பெல்லவில்லே முதல் ஒட்டாவா வரையிலான ஒன்டாரியோவின் பகுதிகளிலும், கட்டினியூ முதல் பாய்–கோம்யூ வரையிலான கியூபெக் பகுதிகளிலும் 10 முதல் 20 சென்றி மீற்றர் வரை பனிப்பொழிவு எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், ஒட்டாவாவுக்குத் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில், பனியுடன் பனிக் கட்டிகள் அல்லது உறைபனி மழை பெய்யக்கூடும் என எச்சரிக்கப் பட்டுள்ளது.

இந்த பனிப்பொழிவால் வாகன போக்குவரத்து சிரமங்கள் ஏற்படும் என்பதால், மக்கள் தங்கள் பயணத் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அதோடு வாகனம் செலுத்தும் போது முன்பக்க விளக்குகளை ஒளிர விட்டு, வீதியில் முழு கவனம் செலுத்த வேண்டும் என இலக்கை அடையக் கூடுதல் நேரத்தை ஒதுக்குங்கள், மேலும் முன்னால் செல்லும் வாகனத்திற்கும் இடையில் போதுமான இடைவெளியைப் பேணுங்கள் என்றும் ஒன்டாரியோ மாகாண பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.







